RNI-NO: TNTAM/2021/83936

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

சிவகங்கை | மலர்-4 | இதழ்- 321 | நவம்பர்.21 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5







## உச்சநீதிமன்றத் தீர்ப்பை நான் மனமார வரவேற்கிறேன்: செல்வப்பெருந்தகை



சென்னை, நவ.21-

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பில், இந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பை நான் மனமார வரவேற்கிறேன் என செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்ததாவது; மாநில சட்டமன்றம் மக்கள் இறையாண்மையின் தூணாகவும், ஜனநாயகத்தின் உயிர்துடிப்பாகவும் விளங்குகிறது. அந்த உயரிய அமைப்பு நிறைவேற்றிய மசோதாக்களை, எந்தவொரு காரணமும் கூறாமல் ஆளுநர் நிறுத்தி வைக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் இன்று வழங்கிய தீர்ப்பு, இந்திய கூட்டாட்சித் தத்துவத்தையும் அரசியலமைப்புச் சட்டத்தின் ஆதாரக் கொள்கைகளையும் வலுவாக உறுதிப்படுத்துகிறது. மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு செயல்படுத்தும் சட்டங்களையும் கொள்கைகளையும் தடுக்கும் வகையில் ஆளுநர் பதவியைப் பயன்படுத்துவது என்பது அரசியலமைப்பின் ஆன்மாவின் நோக்கத்துக்கு முழுமையாக முரண்படுவதாகும் என்பதை இன்றைய தீர்ப்பு தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

சட்டமன்றத்தின் ஒவ்வொரு முடிவும் மக்களின் விருப்பத்தின் வெளிப்பாடே என்பதை இந்த தீர்ப்பு மறுபடியும் அனைவருக்கும் உணர்த்துகிறது. இந்த தீர்ப்பு மாநிலங்களின் உரிமை, மக்கள் ஆட்சியின் கண்ணியம் ஆகியவற்றை பாதுகாக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க முன்னோட்டமாகும். மாநில அரசின் செயல்பாடுகளை தாமதப்படுத்தும் அல்லது தடைசெய்யும் நோக்கத்துடன் ஆளுநர் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்பதை உச்சநீதிமன்றம் முற்றிலும் தெளிவுபடுத்தியுள்ளது. இது சட்டமன்றத்தின் மதிப்பையும், மக்களின் தீர்மானத்தின் மேன்மையையும் உயர்த்தும் நீதியின் முழக்கமாக திகழ்கிறது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பில், இந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பை நான் மனமார வரவேற்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் செயல்பாடுகளில் எந்தவிதத் தடையும் இன்றி சட்டபூர்வமான முறையில் முன்னேற வேண்டும் என்ற நமது நிலைப்பாட்டுக்கு இன்று நீதிமன்றம் அளித்த உறுதிப்படுத்தல் மிகப் பெரும் பலமாகும். அரசியலமைப்பை மதிக்கும் பண்பும், கூட்டாட்சி மரபுகளைக் காக்கும் பொறுப்பும் அனைவராலும் கடைபிடிக்கப்பட வேண்டும் என்பதையும் இந்த தீர்ப்பு வலியுறுத்துகிறது. தமிழக மக்கள் தேர்ந்தெடுத்த அரசின் அதிகாரம் பாதிக்கப்படாமல், சட்டமன்றத்தின் கண்ணியம் குறையாமல், ஜனநாயகத்தின் மதிப்பு நிலைக்க தகுந்த பாதையை இந்த தீர்ப்பு உருவாக்கியுள்ளது. மக்கள் நலனே முதன்மையானது என்ற உண்மையான அரசியலமைப்பு வழங்கிய உறுதி மொழியில், நாங்கள் தொடர்ந்து நிலைத்திருக்கிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு, தேனி மாவட்டம், கொடுவிலார்பட்டி கம்மவார் சங்கம் கல்லூரியில் வாக்கு எண்ணிக்கை மையம் அமைப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## பீஹார் முதல்வராக 10வது முறையாக நிதிஷ் குமார் பதவியேற்பு



பாட்னா: நவ.21-

பிரதமர் நரேந்திர மோடி, அமித் ஷா மற்றும் என்டிஏ கூட்டணி தலைவர்கள் முன்னிலையில், ஐக்கிய ஜனதா தளம் தலைவர் நிதிஷ் குமார் நேற்று (நவம்பர் 20) பிஹார் முதல்வராக 10வது முறையாக பதவியேற்றார். அவருக்கு ஆளுநர் ஆரிஃப் முகமது கான் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

நிதிஷ் குமார் பதவியேற்ற உடனேயே, பாஜக தலைவர்கள் சாம்ராட் சவுத்ரி மற்றும் விஜய் குமார் சின்ஹா ஆகியோர் கேபினட் அமைச்சர்களாக பதவியேற்றனர். ஜேடியு தலைவர்கள் விஜய் குமார் சவுத்ரி, பிஜேந்திர பிரசாத் யாதவ், ஷ்ரவன் குமார், பாஜக தலைவர்கள் மங்கள் பாண்டே, திலீப் குமார் ஜெய்ஸ்வால் மற்றும் நிதின் நபின் உள்ளிட்ட பலரும் கேபினட் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

முன்னதாக, நேற்று தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சட்டப்பேரவை குழு தலைவராக நிதிஷ் குமார் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். முன்னதாக, பாட்னாவில் உள்ள நிதிஷ்குமாரின் இல்லத்தில் நடைபெற்ற ஜேடியு சட்டப்பேரவை உறுப்பினர்களின் கூட்டத்தில் அவர் ஜேடியு சட்டப்பேரவை கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

26 கேபினட் அமைச்சர்கள் பதவியேற்பு:

பீகாரில் மொத்தம் 26 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர். இதில் பாஜகவிலிருந்து 14 பேர், ஜே.டி.யுவிலிருந்து 8 பேர், எல்.ஜே.பியிலிருந்து 2 பேர், எச்.ஏ.எம் மற்றும் ஆர்.எல்.எம்லிருந்து தலா ஒருவர் அமைச்சர்களாக பொறுப்பேற்றனர். நிதிஷ் குமாரின் அமைச்சரவையில் உள்ள 26 பேரில் ஒரே ஒரு முஸ்லிம் மட்டும் இடம்பெற்றுள்ளார்.

மஹுவா சட்டமன்றத் தொகுதியில் லாலு பிரசாத்தின் மகன் தேஜ் பிரதாப் யாதவை தோற்கடித்த எல்.ஜே.பியின் சஞ்சய் குமார் சிங் உட்பட 9 புதிய முகங்கள் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர். பீகார் அமைச்சரவையில் மூன்று பெண்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கயா டவுனில் இருந்து 9 முறை பாஜக எம்.எல்.ஏ.வான பிரேம் குமார் சபாநாயகராக பொறுப்பேற்கிறார்.

## திமுக அரசின் பொய் தொழில் முதலீடுகள்: ஆவண புத்தகத்தை வெளியிட்டார் அன்புமணி




சென்னை, நவ.21-

பாமக சார்பில், திமுக ஆட்சியின் தொழில் முதலீடுகள் குறித்த உண்மை நிலை என்ன என்பதை விளக்கும் வகையில் ஆவண புத்தகம் வெளியீட்டு நிகழ்ச்சி எழும்பூரில் நேற்று நடந்தது. இந் நிகழ்ச்சிக்கு பாமக தலைவர் அன்புமணி தலைமை தாங்கி, ‘திமுக அரசின் பொய் தொழில் முதலீடுகள்’ என்ற ஆவண புத்தகத்தை வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் அன்புமணி பேசியதாவது: தமிழகத்தில் ரூ.11 லட்சத்து 32 ஆயிரம் கோடி தொழில் முதலீடுகள் நடந்திருக்கிறது என்றும், அதன்மூலம் 34 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின், தொழில்துறை அமைச்சர், நிதியமைச்சர் ஆகியோர் தொடர்ந்து ஒரு பொய்யைச் சொல்லி வருகிறார்கள். அது பொய் என்று இந்த ஆவணம் மூலம் நிரூபித்திருக்கிறோம். குறிப்பாக, 2025 செப்டம்பர் மாதம் வரை ரூ.11,32,575 கோடியில் 1,059 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதாகவும், இதன்மூலம், 34,02,998 வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என அரசு தரப்பில் கூறப்படுள்ளது. அதாவது, 202122ம் ஆண்டில் ரூ.68,405 கோடி மதிப்பீட்டில் 130 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

அவற்றில் ரூ.10,000 கோடி மட்டுமே முதலீடுகள்வந்திருப்பதாக உத்தேசமாக கணக்கிடப்பட்டுள்ளது. அதேபோல், 202223ம் நிதியாண்டில் ரூ.1.67 லட்சம் கோடியில் 86 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தான நிலையில், ரூ.7 ஆயிரம் கோடிக்கும் குறைவாகவே முதலீடுகள் வந்துள்ளன.

2024 ஜனவரியில் சென்னையில் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.6,64,180 கோடி மதிப்பீட்டில் 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. ஆனால், இதில் 600க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இதுவரை முதலீடு செய்யவில்லை.

மேலும், 202425ம் ஆண்டில் ரூ.39,549 கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, இதுவரை ஒன்றுகூட செயல்பாட்டுக்கு வரவில்லை. 2025 ஏப்ரல் முதல் தற்போதுவரை ரூ.1.18 லட்சம் கோடிக்கு 166 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெ ழுத்தாகி உள்ளன. இதில் ஒன்றுகூட செயல்வடிவம் பெறவில்லை.

முதல்வர் ஸ்டாலின் 7 நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு, ரூ.34,014 கோடிக்கு 66 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். ஆனால், இதுவரை ஒரு பைசா முதலீடுகூட வரவில்லை. தமிழகத்தில் கங்கைகொண்டானில் தொழில் தொடங்க கையெழுத்திட்ட நிறுவனம் ஒருசில நாட்களில் ஆந்திராவுக்குச் சென்றது ஏன்? அமெரிக்காவின் கூகுள் நிறுவன தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை தமிழகத்தைச் சேர்ந்தவர். அந்த நிறுவனம் தமிழகத்தில் முதலீடு செய்யாமல், ஆந்திராவுக்குச் சென்றது ஏன்? எல்லாவற்றுக்கும் ஊழல் தான் காரணம். இவ்வாறு அவர் கூறினார்.

## ஜெஃப்ரி எப்ஸ்டீன் கோப்புகளை வெளியிடும் மசோதாவில் டிரம்ப் கையெழுத்து: வெளியாகப்போகும் மர்மங்கள்

வாஷிங்டன், நவ.21-

பாலியல் குற்றச்சாட்டுகளில் பரபரப்பாக பேசப்பட்ட ஜெஃப்ரி எப்ஸ்டீன் தொடர்பான அனைத்து கோப்புகளையும் வெளியிட அனுமதிக்கும் மசோதாவில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

அமெரிக்காவில் பல பாலியல் குற்றச்சாட்டுகளில் பரபரப்பாக அடிபட்ட நபர் ஜெஃப்ரி எப்ஸ்டீன். அவர் மீதான வழக்குகள் நிலுவையில் இருந்தபோது 2019 ஆம் ஆண்டு சிறையிலேயே தற்கொலை செய்து கொண்டார். அதன் பின்னர் அந்த வழக்குகள் கைவிடப்பட்டன. அவர் தொடர்பான விசாரணையில் நீதிமன்றம் அறிந்துகொண்ட தகவல்களும் சீலிடப்பட்டு வைக்கப்பட்டன. அந்த வழக்கில் பெரும்புள்ளிகளின் பெயர்கள் அடிப் பட்டது அதற்கு ஒரு காரணம்.

இந்த சூழலில், ஜெஃப்ரி எப்ஸ்டீன் தொடர்பான வழக்கின் அனைத்து கோப்பு களையும் வெளியிடக்கோரி ஜனநாயக கட்சியினர் கடுமையாக அழுத்தம் கொடுத்து வந்தனர். ஆரம்பத்தில் அந்த முயற்சிகளை எதிர்த்த ட்ரம்ப், பிறகு அவரது குடியரசு கட்சியினரும் கோரிக்கை வைத்ததால் கோப்புகளில் கையெழுத்திட ஒப்புக்கொண்டார்.

இதனை தொடர்ந்து 4271 வாக்குகளில் இது தொடர்பான மசோதாவை அமெரிக்க செனட் சபை நிறைவேற்றியது. கிளே ஹிக்கின்ஸ் மட்டும் மசோதாவை எதிர்த்தார். விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள அப்பாவி மக்கள் பற்றிய தகவல்களை வெளியிட இந்த மசோதா வழிவகுக்கும் என்று அவர் வாதிட்டார். பின்னர் செனட் சபை வாக்கெடுப்பு இல்லாமல் இம்மசோதாவை நிறைவேற்றியது.

இது தொடர்பாக ட்ரம்ப் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், ‘ஜனநாயகக் கட்சியினர் எங்கள் அற்புதமான வெற்றிகளிலிருந்து திசை திருப்ப முயற்சிப்ப தற்காக, குடியரசுக் கட்சியை விட அவர்களை அதிகம் பாதிக்கும் எப்ஸ்டீனின் பிரச்சினையைப் பயன்படுத்தியுள்ளனர்’ என்று மசோதாவில் கையெழுத்திட்டது குறித்து அறிவித்தார்.

இந்த மசோதாவின்படி, நீதித்துறை எப்ஸ்டீனுடன் தொடர்புடைய அனைத்து கோப்புகள் மற்றும் தகவல் தொடர்புகளையும், 2019 இல் சிறையில் அவர் இறந்தது தொடர்பான விசாரணை பற்றிய அனைத்து தகவல்களையும் 30 நாட்களுக்குள் வெளியிட வேண்டும்.

ஜெஃப்ரி எப்ஸ்டீனுடன் ட்ரம்ப் நண்பராக இருந்தார் என்று தொடர்ந்து குற்றம்சாட்டப்படுகிறது. ஆனால் எப்ஸ்டீனின் குற்றங்கள் பற்றி தனக்குத் தெரியாது என்றும், நீண்ட காலத்திற்கு முன்பே அவருடனான உறவுகளை துண்டித்துவிட்டதாகவும் ட்ரம்ப் கூறி வருகிறார்.

பிரச்சினையின் பின்னணி: கடந்த 2015 ஆம் ஆண்டு வர்ஜீனியா கிஃபர் என்ற அமெரிக்க பெண், பிரிட்டனைச் சேர்ந்த கிஷ்லெய்ன் மேக்ஸ்வெல் என்பவர் மீது ஒரு வழக்கு தொடர்ந்தார். அதில் ஜெஃப்ரி எப்ஸ்டீன் என்ற பாலியல் தொழில் இடைத்தரகருடன் சேர்ந்து கிஷ்லெய்ன் பாலியல் தொழிலுக்காக ஆள் கடத்தலில் ஈடுபட்டார் என்று கூறியிருந்தார். தானும் அவ்வாறாக



பாலியல் தொழிலுக்கு தள்ளப்பட்டதாகவும் அவர் கூறியிருந்தார். மேலும், 1999 முதல் 2022 வரை பாலுறவில் ஈடுபடும் வயதை எட்டாத தன்னை பலருடனும் கட்டாயப்படுத்தி உறவில் ஈடுபட வைத்ததாகவும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகளை அடுத்து எப்ஸ்டீன் கைது செய்யப்பட்டார் அவர் மீதான வழக்கு விசாரணைகள் நடந்து கொண்டிருந்தபோது 2019 ஆகஸ்டில் அவர் நியூயார்க் சிறையில் தற்கொலை செய்து கொண்டார். அத்துடன் எல்லாம் முடிந்துவிட்டதாக கருதப்பட்ட நிலையில், தற்போது இந்நாள், முன்னாள் பிரபலங்களை கலக்கம் கொள்ளச் செய்யும் வகையில் நீதிபதி உத்தரவு லீக்காகும் தகவல்களும் அமைந்துள்ளன.

எப்ஸ்டீன் பில் கிளின்டன் தொடர்பு: நீதிமன்ற ஆவணங்களில் பில் கிளின்டன் “Doe 36” என்று ரகசிய குறியீட்டுடன் குறிப்பிடப்பட்டுள்ளார். அந்த ரகசியக் குறியீடு 50 முறை ஆவணத்தில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிகிறது. வழக்கு தொடர்ந்த வர்ஜினியா, தான் பில் கிளின்டனை ஒரு தீவில் இரண்டு முறை பார்த்திருப்பதாகவும் அப்போது அவருடன் இளம் பெண்கள் இருந்ததாகவும் கூறியுள்ளார். அந்தத் தீவு எப்ஸ்டீனுக்கு சொந்தமானது என்றும் அவர் கூறியுள்ளார். ஆனால், இந்த குற்றச்சாட்டை முன்னரே கிளின்டன் தரப்பு பலமுறை மறுத்துள்ளது. அது தொடர்பாக நடந்த விசாரணையில் பில் கிளின்டனின் விமானப் பயண ஆவணங்கள் சரி பார்க்கப்பட்டன. அப்போது, அவர் எப்ஸ்டீனின் விமானத்தைப் பயன்படுத்தி பாரிஸ், பாங்காக், ப்ரூனே ஆகிய இடங்களுக்குச் சென்றது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இந்தப் பயணங்களை அதிபர் பதவிக்காலத்துக்குப் பின்னர் கிளின்டன் மேற்கொண்டுள்ளார்.

நீதிமன்ற ஆவணங்களின்படி ஜொஹான ஸ்ஜோ பெர்க் என்ற பாதிக்கப்பட்ட இன்னொரு பெண்ணும் கிளின்டன் சர்ச்சையை உறுதிப்படுத்தும் வகையில் சாட்சியம் கூறியுள்ளார். எப்ஸ்டீன் என்னிடம், “கிளின்டனுக்கு உங்களைப் போன்ற இளம் பெண்களையே பிடிக்கும் என்று கூறினார்” என சாட்சியம் கூறியிருக்கிறார். கிளின்டன் அதிபராக இருந்தபோது வெள்ளை மாளிகையைச் சேர்ந்த 22 வயது பணிப் பெண்ணுடன் பாலியல் தொடர்பு வைத்துக் கொண்டதாக சர்ச்சையில் சிக்கியது நினைவுகூரத்தக்கது.

ஸ்டீபன் ஹாக்கிங் ஜெஃப்ரி எப்ஸ்டீன் தொடர்பு: 2015ல் வர்ஜினியா கிஃபரின் வழக்கையடுத்து எப்ஸ்டீன் அனுப்பிய மின்னஞ்சல் முக்கியத்துவம் பெற்றுள்ளது. கிஷ்லெயின் மேக்ஸ்வெல்லுக்கு எப்ஸ்டீன் அனுப்பிய அந்த மின்னஞ்சலில், “ஸ்டீபன் ஹாக்கிங் பாலுறவுக்கான வயதை எட்டாத பெண்களுடன் உறவு கொண்டார் என்று வெர்ஜினியா கூறுவது பொய் என்று சொல்ல முன்வரும் அவரது நண்பர்கள், குடும்பத்தினர், தெரிந்தவர்கள் என யாராக இருந்தாலும் அவர்களுக்கு பெரும் தொகையை சன்மானமாக வழங்கலாம்” என்று குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகிறது. இளவரசர் ஆண்ட்ரூவும்.. இந்த பாலியல் குற்றச்சாட்டு வரிசையில் இடம்பெற்றுள்ள இன்னொரு பெரும்புள்ளி இளவரசர் ஆண்ட்ரூ. ராணி எலிச்பெத்தின் மகன்களில் ஒருவரான இளவரசர் ஆண்ட்ரூ, சட்டரீதியான வயதுக்கு கீழே இருந்த அமெரிக்கப் பெண் வர்ஜீனியாவுடன் பலவந்தமாக பாலியல் உறவு வைத்துக்கொண்டார் என்று நீதிமன்ற ஆவணங்களில் உள்ளது.

இளவரசர் முறையற்ற வகையில் நடந்து கொண்டார் எனக் கூறும் வகையிலான இந்தக் கூற்றுகள் முற்றாக உண்மைக்கு புறம்பானவை என்று நீண்ட காலமாக பக்கிங்ஹாம் அரண்மனை மறுத்து வருகிறது. இருப்பினும், இளவரசர் ஆண்ட்ரூவின் முன்னாள் நண்பர் ஜெஃப்ரி எப்ஸ்டைன் என்பது கவனிக்கத்தக்கது. எப்ஸ்டைனால், அவருடன் இருந்த இளவரசர் ஆண்ட்ரூ உட்பட பலருடன் பாலியல் உறவு வைத்துக் கொள்ளுமாறு தான் நிர்பந்திக்கப்பட்டதாக வர்ஜீனியா கூறியிருக்கிறார்.

இவர்களைத் தவிர ஆல்ஃபபெட் இங்க் (Alphabet Inc) என்ற கூகுள் நிறுவனத்தின் தாய்க்கழகத்தின் இணை நிறுவனரான லாரி பேஜ் மீதும் ஜெஃப்ரி எப்ஸ்டீன் தொடர்பு பற்றி நீதிமன்ற ஆவணங்களில் இருக்கிறது. நோபல் பரிசு புகழ் லாரன்ஸ் க்ராஸ், மறைந்த பாப் கிங் மைக்கேல் ஜாக்சன், மேஜிக் கலைஞர் டேவிட் காப்பர்ஃபீல்டு, காமெடி நடிகர் கிறிஸ் டக்கர், நடிகர் கெவின் ஸ்பேசி ஆகியோரும் ஜெஃப்ரியின் வர்ஜின் தீவுகளில் நடந்த பாலியல் கொண்டாட்ட நிகழ்வுகளில் கலந்து கொண்டதாகத் தெரிகிறது.

எப்ஸ்டீனின் வர்ஜின் தீவுகளில் நடந்த சிறுமிகள், இளம் பெண்களுடனான பார்ட்டி கொண்டாட்டங்களில் பில் கிளின்டன், ஸ்டீபன் ஹாக்கிங் உள்பட இத்தனை பெரும்புள்ளிகளும் ஈடுபட்டனரா என்ற வாத விவாதங்கள் இந்த ‘ஜெஃப்ரி லீக்ஸ்’ ஆவணங்களால் வலுத்துள்ளது.




## 14வது ஹாக்கி இளையோர் உலகக்கோப்பை முன்னிட்டு விளையாட்டு வீரர்கள் வருகை, வரவேற்பு மற்றும் பாதுகாப்பு குறித்து மாவட்டஆட்சியர் பிரவீன் குமார் ஆய்வு

மதுரை, நவ.21-

மதுரை மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில் வரும் 28.11.2025 முதல் 10.12.2025 வரை 14வது ஹாக்கி இளையோர் உலகப்கோப்பை நடைபெற உள்ளதை முன்னிட்டு விளையாட்டு வீரர்கள் வருகை,வரவேற்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை குறித்து மதுரை விமான நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் பிரவீன் குமார்ஆய்வு மேற்கொண்டார்.

14 வது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக்கோப்பைப் போட்டி, தமிழ்நாட்டில், சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம் மற்றும் மதுரையில் அமைந்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஹாக்கி விளையாட்டரங்கம் ஆகிய இரு இடங்களிலும் 28.11.2025 முதல் 10.12.2025 வரை சிறப்பாக நடைபெற உள்ளது.

இந்த விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க நவம்பர் 21 -ஆம் தேதியன்று தென் ஆப்ரிக்கா, அயர்லாந்து நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும், நவம்பர் 22ஆம் தேதியன்று கனடா, பெல்ஜியம் நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும், நவம்பர் 23ஆம் தேதியன்று ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும், நவம்பர் 24ஆம் தேதியன்று நமீபியா, நெதர்லாந்து, இங்கிலாந்து மற்றும் மலேசியா நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும், நவம்பர் 25ஆம் தேதியன்று ஆஸ்திரியா, ஸ்பெயின் நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும், நவம்பர் 26 ஆம் தேதியன்று எகிப்து நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும் வருகை புரியவுள்ளனர். விளையாட்டு வீரர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு தமிழர் பாரம்பரிய முறைப்படி சிறப்பான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், தெரிவித்துள்ளார்.



## அணைக்கட்டு தொகுதி, மாநகராட்சி பள்ளி, பலவன்சாத்துக்குப்பத்தில் எஸ் ஐ ஆர் பணிகள் குறித்து ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் நேரில் ஆய்வு

வேலூர், நவ.21-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி, பலவன்சாத்துகுப்பம், மாநகராட்சி பள்ளியில், மாவட்ட தேர்தல் அலுவலரும் / மாவட்ட ஆட்சியருமான சுப்புலெட்சுமி, பலவன்சாத்துகுப்பத்தில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் செயல்பட்டு வரும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த கணக்கீட்டு படிவங்களை பூர்த்தி செய்யும் உதவி மையத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது உதவி வாக்காளர் பதிவு அலுவலரும் /அணைக்கட்டு வட்டாட்சியருமான சுகுமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

## இராமநாதபுரத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஓவியம் போட்டி:கலெக்டர் துவக்கி வைத்தார்

இராமநாதபுரம், நவ.21-

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் முகமது சதக் தஸ்தகீர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் நடைபெற்ற மாற்றுத்திறனா ளிகளு க்கான ஓவியப்போட்டியை மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தொடங்கி வைத்து பார்வையிட்டார். உலக மாற்றுத்திறனாளிகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3ந் தேதி கொண்டாடப் படுகிறது. இந்த நாள் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள்,நல்வாழ்வு மற்றும் சமூகத்தின் அனைத்து அம்சங்களிலும் அவர்களின் பங்களிப்பு மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது நோக்கமாக கொண்டுள்ளது.இன்றைய தினம் இராமநாதபுரம் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஓவியப் போட்டி நடைபெற்றது.இந்த போட்டியில் மாற்றுதிறன் வகை வாரியாகவும்,10 வயதுக்கு கீழ்,1118 வயது, 18 வயதுக்கு மேல் ஆகிய பிரிவுகளின்படி போட்டி நடைபெற்றது. மாற்றுத்திறனாளிகள் வரையும் ஓவியத்தில் சிறந்த ஓவியத்தை ஓவிய ஆசிரியர் 5 பேர் கொண்ட குழு தேர்ந்தெடுத்து அதன் விவரத்தை சென்னைக்கு அனுப்பி வைப்பார்கள்.இன்றைய தினம் நடைபெற்ற போட்டியில் 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.போட்டியில் வெற்றி பெறும் மாணவ,மாணவியர்களுக்கு உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று பரிசு மற்றும் பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சரவணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் எல்.ரெஜினி மற்றும் அரசு அலுவலர்கள் மாணவ,மாணவியர்கள் கலந்து கொண்டனர்.





## ”மாபெரும் தமிழ்க் கனவு” நிகழ்ச்சியானது அமராவதிபுதூர், ஸ்ரீ ராஜராஜன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது: மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, நவ.21-

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டத்திற்குட்பட்ட அமராவதிபுதூர், ஸ்ரீ ராஜராஜன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், தமிழ் இணையக் கல்விக்கழகம் மற்றும் உயர்கல்வித்துறை ஆகியவைகளின் சார்பில், மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்ச்சி நடைபெற்றது.



தமிழ் மரபின் வளமையையும் பண்பாட்டின் பெருமையையும் எதிர்கால சந்ததியினர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டும், சமூக விழிப்புணர்வையும் பொருளாதார முன்னேற்றம் குறித்து அறிந்து கொள்ளும் வகையிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் “ மாபெரும் தமிழ்க் கனவு ” நிகழ்ச்சியானது சிறப்பாக நடைபெற்று வருகிறது.

முன்னதாக, தமிழ் இணையக் கல்விக்கழகம் உயர்கல்வித் துறையுடன் இணைந்து ”மாபெரும் தமிழ்க் கனவு” எனும் தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்வானது கடந்த 202223, 202324 ஆம் கல்வியாண்டுகளில், தமிழ்நாடு முழுவதும் உள்ள 200 கல்லூரிகளில், 300 சொற்பொழிவுகளின் வாயிலாக 2,000 கல்லூரிகளைச் சேர்ந்த ஏறத்தாழ 2 லட்சம் மாணவர்களைச் சென்றடையும் வண்ணம் சிறப்பாக நடத்தப்பட்டது.

மேலும், மாபெரும் தமிழ்க் கனவின் 100 வது நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்நிகழ்ச்சி ஒவ்வோரு ஆண்டும் தொடர்ந்து நடத்தப்படும் என அறிவித்தார்கள். அவ்வறிவிப்பிற்கிணங்க, இந்நிகழ்ச்சியானது, 2025 ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டு, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

உலகின் செழித்தோங்கிய பண்பாடுகளில் முதன்மையான தமிழ்ப் பண்பாட்டின் பெருமைகளையும், வளமையையும் அது எதிர்கொண்ட சவால்களையும், மாணவர்களிடையே கொண்டு சேர்ப்பதே இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும்.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் இவ்வாண்டிற்கான தமிழ்க் கனவு நிகழ்ச்சிகள் நடத்திட அறிவுறுத்தியதன் அடிப்படையில், கடந்த 20.8.2025 அன்று சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரியிலும், 7.11.2025 அன்று காளையார்கோவில், புனித மைக்கேல் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியிலும் சிறப்பாக நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து, இன்றையதினம் காரைக்குடி வட்டத்திற்குட்பட்ட அமராவதிபுதூர், ஸ்ரீ ராஜராஜன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிகழ்ச்சியில், ஸ்ரீ ராஜராஜன் கல்விக் குழுமம், தவத்திரு குன்றக்குடி அடிகளார் கல்வியியல் கல்லூரி, திருப்பத்தூர் ஆறுமுகம் பிள்ளை கல்வியியல் கல்லூரி, விவேகானந்தா கல்வியியல் கல்லூரி , அல்அமீன் கல்வியியல் கல்லூரி, ஆனந்தா கல்லூரி மாணாக்கர்கள் என 900 த்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் பங்கேற்றுள்ளனர்.

தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை இளைய தலைமுறைகளாகிய கல்லூரி மாணாக்கர்களுக்கு உணர்த்துவது என்பது ஆரோக்கியமான எதிர்கால சமூக கட்டமைப்பின் ஒரு முக்கிய பகுதியாகும். இதனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு முழுவதும் உள்ள 200 கல்லூரிகளில் தமிழர் மரபும் அதன் நாகரிகம் குறித்தும், உயர்தனிச் செம்மொழியான தமிழின் சிறப்பு, இலக்கியச் செழுமை, தமிழர் தொன்மை, சமூக சமத்துவம், மகளிர் மேம்பாடு, தொல்லியல் ஆய்வுகள், தொழில் வளர்ச்சி, கல்விப் புரட்சி முதலியவை குறித்து, திறமை மிக்க சொற்பொழிவாளர்களைக் கொண்ட மாபெரும் தமிழ்க் கனவு சொற்பொழிவு நிகழ்ச்சி இன்றையதினம் சிவகங்கையில் நடைபெற்று வருவது நம் அனைவருக்கும் பெருமைக்குரிய ஒன்றாகும்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் மரபு மற்றும் பண்பாடு பரப்புரையாக ”நம் தமிழ் நம் பெருமை” என்ற தலைப்பில் சொற்பொழிவாளர், பத்மஸ்ரீ முனைவர் நர்த்தகி நடராஜ் அவர்கள் மாணாக்கர்களிடையே சிறப்புரையாற்றி, ஆக்கப்பூர்வமான பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார்.

மேலும், இதில் பங்கு பெற்றுள்ள மாணவர்களுக்கு உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டி புத்தகமும், தமிழ் பெருமிதம் குறித்த குறிப்பேடும் வழங்கப்பட்டுள்ளது. உயர்கல்வி, வேலை வாய்ப்பு, வங்கிக் கடனுதவி, தொழில் வாய்ப்பு ஆகியவைகள் குறித்து, மாணவர்கள் அறிந்துகொள்ளும் வகையில், துறை ரீதியான அரங்குகளும், புத்தகக் காட்சி அரங்கும் அமைக்கப்பட்டிருந்தது. கீழடி இரும்பின் தொன்மை குறித்த காட்சிப் படங்களும் திரையிடப்பட்டது.

இதனை மாணவர்கள் பயன்படுத்திக் கொண்டு, பண்பாட்டிற்கும், எதிர்காலத்திற்கும் வழிகாட்டிடும் வகையில், அடிப்படையாகத் திகழும் இந்நிகழ்ச்சியின் மூலம் சிறந்த சொற்பொழிவாளர்கள் வாயிலாக எடுத்துரைக்கப்பட்டுள்ள கருத்துக்களை உள்வாங்கி, மாபெரும் தமிழ் கனவினை நனவாக்குகின்ற வகையில் மாணாக்கர்கள் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு, தங்களை சார்ந்தவர்களுக்கும் எடுத்துரைத்து, பயன்பெற செய்தல் வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.,ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்ப் பெருமிதம் குறிப்புகளை மிகச் சிறப்பாக வாசித்து வழங்கிய ஐந்து மாணாக்கர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பெருமிதச் செல்வன், பெருமிதச் செல்வி என்ற பாராட்டுச் சான்றிதழ்களும், சிறப்பான கேள்விகளைச் கேட்ட 5 மாணாக்கர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கேள்வியின் நாயகன், கேள்வியின் நாயகி என்ற பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், ஸ்ரீ ராஜராஜன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி தாளாளர் முனைவர் சொ.சுப்பையா, முதல்வர் முனைவர் சிவக்குமார், மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் ச.அந்தோனி டேவிட்நாதன், தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் திருமதி சீதாலட்சுமி, நிகழ்ச்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் முனைவர் ச.இராமமூர்த்தி, பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள் மற்றும் அரசின் பல்வேறு துறைகளைச் சாரந்த அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## “எஸ்ஐஆர் பணியில் முறைகேடுகளுக்கு வாய்ப்பு” கிருஷ்ணசாமி கருத்து

சென்னை, நவ.21-

“அரசியல் கட்சிப் பிரதிநிதிகளை கொண்டு மேற்கொள்வதால் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை முறைகேடுகளுக்கு வாய்ப்புள்ளது” என்று புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி கூறினார்.

இது குறித்து சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறியது: “ராமேசுவரத்தில் கல்லூரி மாணவி படுகொலை செய்யப்பட்டது கண்டிக்கத்தக்கது. கவுரவ கொலையை தடுக்க சட்டம் கொண்டு வந்ததுபோல, கட்டாயக் காதல், கட்டாய திருமணத்தை தடுக்க சட்டமியற்ற வேணடும்.

தமிழகத்தில் தேவேந்திரகுல வேளாளர், ஆதிதிராவிடர், அருந்ததியின மக்கள் வாழும் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்காமல் புறக்கணித்துள்ளனர். வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை ஒரு மாதத்தில் செய்து முடிக்க முடியுமா என்று பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அரசியல் கட்சிப் பிரதிநிதிகளை கொண்டு இந்தப் பணியை மேற்கொள்வதால் முறைகேடுகளுக்கு வாய்ப்புள்ளது.

எனவே, வாக்குசாவடி நிலை அலுவலர்களைக் கொண்டு இப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், கூடுதலாக அவகாசம் வழங்க வேண்டும். இப்பணியில் மாநில அரசு ஊழியர்கள் மட்டுமின்றி, மத்திய அரசு ஊழியர்களையும் ஈடுபடுத்த வேண்டும்.

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற நினைப்பவர்கள் கூட்டணி ஆட்சிக்கு ஒப்புக்கொள்ள வேண்டும். தமிழகத்தில் நிலவும் ஒரு கட்சி ஆட்சி முறையை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு விடிவுகாலம் வரும். கூட்டணி ஆட்சி, பூரண மதுவிலக்கு ஆகிய இரண்டு விஷயங்களே வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் ஆதிக்கம் செலுத்தும்” என்று அவர் கூறினார்.




■ சிறப்பு தீவிர திருத்தம் 2026 கணக்கீட்டு படிவத்தை பொதுமக்கள் நிரப்பிட வழிகாட்டும் வகையில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்த உதவி மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி. நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.



## வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் ஆய்வு செய்தார்

கடலூர், நவ.21-

கடலூர் மாவட்டத்திற்குட்பட்ட புவனகிரி, நெய்வேலி மற்றும் கடலூர் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பல்வேறு இடங்களில் வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்கள் தேர்தல் ஆணைய இணையத்தில் பதிவேற்றம் செய்யும் பணி நடைபெறுவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில்,

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் கடலூர் மாவட்டத்தில் உள்ள 9 சட்டமன்ற தொகுதிகளிலும் 04.11.2025 அன்று முதல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளாக 2,313 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வாக்காளர்களுக்கு வீடு வீடாக சென்று கணக்கெடுப்பு படிவம் வழங்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் தன்னார்வலர்கள், அரசுப் பணியாளர்கள் மூலம் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

இன்றைய தினம் இப்பணிகள் புவனகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், கீரப்பாளையம் கிராம நிருவாக அலுவலர் அலுவகம், ஒரத்தூர், சேத்தியாத்தோப்பு, கம்மாபுரம், காவனூர் மற்றும் ஊ.மங்கலம் வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள், கார்கூடல் கிராம வறுமை ஒழிப்பு சங்க அலுவலகம், கெங்கைகொண்டான் பேரூராட்சி அலுவலகம், நெய்வேலி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர் (நிலஎடுப்பு) அலுவலகம், கடலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவந்திபுரம் வருவாய் ஆய்வாளர் அலுவலகம், மாநகராட்சி அலுவலகம், கடலூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய இடங்களில் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படுவது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இப்பணிகள் தேர்தல் ஆணையம் வழிகாட்டுதலின்படி, அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றி முறையாக சரியான முறையில் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறதா என்பது குறித்தும், வாக்காளர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்ப படிவங்கள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்தும், அரசு அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் மூலம் விண்ணப்ப படிவங்கள் வாக்காளர்கள் விடுபடாமல் முறையாக பதிவேற்றம் செய்யப்படுகிறதா என்பது குறித்து இன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் ர.அ.பிரியங்கா இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) சண்முகவள்ளி, கடலூர் மாநகராட்சி ஆணையாளர் முஜிபூர் ரஹ்மான், மாவட்ட வழங்கல் அலுவலர் குமாரராஜா, தனித்துணை ஆட்சியர் (நிலஎடுப்பு) வில்சன், கடலூர் வருவாய் கோட்டாட்சியர் சுந்தரராஜன், வருவாய் வட்டாட்சியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## சாக்கோட்டை ஒன்றியத்திற்குட்பட்ட பிரம்புவயல் ஊராட்சியில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது

சிவகங்கை, நவ.21-

சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பிரம்புவயல் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் இடம் பெற்றன.

மேலும், இக்கண்காட்சியில் அரசு திட்டங்கள் குறித்தும், நலத்திட்டங்களை எவ்வாறு பெறுவது, யாரை அணுகி பெறவேண்டும் என்பது குறித்தும் பொதுமக்களுக்கு அலுவலர்களால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட பொதுமக்கள் தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளவும், நலத்திட்ட உதவிகளை யாரை அணுகிப் பெறவேண்டும் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கும் வசதியாக இப்புகைப்படக் கண்காட்சி பெரிதும் உதவியாக இருந்தது என பொதுமக்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்று, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் அரசின் சார்பில் நடத்தப்படும் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பார்த்து, அரசின் திட்டங்கள் குறித்து அறிந்து கொண்டு பயன்பெறவேண்டும்.



## காளையார்கோவில் வட்டார அளவிலான வானவில் மன்ற அறிவியல் பழகு போட்டிகள்

காளையார் கோவில், நவ.21-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் வானவில் மன்ற அறிவியல் பழகு போட்டிகள் காளையார்கோவில் வட்டார வளமைய கூட்டரங்கில் நடைபெற்றது. வட்டார வளமைய மேற்பார்வையாளர் பொறுப்பு கஸ்தூரிபாய் தலைமை வகித்தார். வட்டாரக் கல்வி அலுவலர்கள் பால்ராஜ் லதாதேவி பொன்னி முன்னிலை வகித்தனர். வானவில் மன்ற மாவட்ட இணை ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி உலகளாவிய சவால்களுக்கு உள்ளூர் அளவிலான அறிவியல் தீர்வுகள் தலைப்பில் அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிப்பது குறித்து உரையாற்றினார். மன்ற போட்டிகளின் ஒருங்கிணைப்பாளர் ஜோதிமணி போட்டிகளின் விதிமுறைகளை விவரித்து கூறினார். காளையார் கோவில் வட்டாரத்தில் உள்ள அரசு மேல்நிலை உயர்நிலை நடுநிலை பள்ளிகளில் பயிலும் 6,7,8





வகுப்பு மாணவர்கள் தங்களின் அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். சகாயராணி பெண்கள் மேல்நிலைப்பள்ளி அறிவியல் ஆசிரியை சகாய செல்வி ஸ்ரீ சரஸ்வதி விகாஸ் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அறிவியல் ஆசிரியை வினோ கானாடுகாத்தான் முத்தையா சுப்பையா செட்டியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி நாட்டரசன்கோட்டை அறிவியல் ஆசிரியை மணிமேகலை நடுவர்களாக சிறப்பாக செயல்பட்டனர். வட்டார அளவில் வெற்றி பெறக்கூடிய பள்ளிகள் 24.11.2025 அன்று சிவகங்கையில் நடைபெறும் மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வார்கள். ஆசிரிய பயிற்றுநர்கள் மார்க்ரேட் சித்திக்பாத்திமா இளங்கதிர்செல்வி சத்தியமூர்த்தி கார்த்திக் கணக்காளர் திருச்செல்வம் போட் டிக்கான ஏற்பாட்டினை சிறப்பாக செய்திருந்தனர். மாணவ மாணவிகளை அழைத்து வந்த ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் மதுரை மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கவும், முடிவுற்ற திட்ட பணிகளை துவக்கி வைக்கவும் மற்றும் புதிய திட்டப் பணிகளை அடிக்கல் நாட்டவும் வருகை தர உள்ளதால் மதுரை கிழக்கு வட்டம், உத்தங்குடியில் உள்ள கலைஞர் திடலில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் உடன் உள்ளார்.

## கன்னியாகுமரி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சிறப்பாக செயல்படுகிறது மாவட்ட அளவிலான குழந்தைகள் தொடர்பான அலுவலர்களுக்கான கலந்தாய்வு கூட்டத்தில் மாநில குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் புதுக்கோட்டை விஜயா, அவர்கள் பெருமிதம்

கன்னியாகுமரி, நவ.21-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு அலகு மற்றும் குழந்தைகள் தொடர்புடைய அலுவலர்கான கூராய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.ஆர்.ஸ்டாலின், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் திருமதி.புதுக்கோட்டை விஜயா, அவர்கள் கலந்து கொண்டு, அலுவலர்களுடன் கலந்துரையாடி பேசுகையில்

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி குறித்து துறை அலுவலர்களுடன் கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக பள்ளிகல்வித்துறை, சமூகநலத்துறை, காவல்துறை, குழந்தை தொழிலாளர் துறை, சுகாதாரத்துறை, குழந்தைகள் நலக்குழு, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், குழந்தைகள் உதவி எண், இளைஞர் நீதி குழுமத், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் துறை, வருவாய்த்துறை, பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் துறை உள்ளிட்ட துறை அலுவலர்களிடம் குழந் தைகள் பாதுகாப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.



கன்னியாகுமரி மாவட்டத்தில் குழந்தைகள் நேய மாவட்டமாக உருவாக்குவதில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பங்கு அதிகளவில் உள்ளது. அவர்களுக்கு பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக பள்ளிகளில் இடைநின்ற மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் குழற்தைகள் மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட்ட குழந்தைகளின் விவரங்கள் குறித்து கேட்டறிப்பட்டது. குழந்தை திருமணம் மற்றும் போக்சோ வழக்குகள் குறித்து கேட்டறியப்பட்டது. மேலும் குழந்தை தொழிலாளர்கள் இல்லாத மாவட்டாக நம்முடைய கன்னியாகுமரி மாவட்டம் உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அன்புக்கரங்கள் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 132 குழந்தைகளுக்கு மாதம் ரூ.2,000 உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக கடந்த சில ஆண்டுகள் நீதிமன்ற வழக்கின் காரணமாக ஆணை யத்தின் பணிகளில் சற்று தேய்வு ஏற்பட்டது. தற்போது கடந்த 4 மாதங்களாக தடை நீக்கப்பட்டு, தமிழ்நாட்டிற்குட்பட்ட அனைத்து மாவட்டங்களிலும், ஆக்கப்பூர்வமான பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக நாங்கள் இதுவரை சென்ற வந்த 32 மாவட்டங்களில் கன்னியாகுமரி மாவட்டத்தின் செயல் பாடுகள் மிகவும் சிறப்பாக இருக்கிறது என்பதில் மிகவும் பெருமைப்படுகிறேன். இதற்காக ஊக்க அளித்து வரும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், துறை அலுவலர்களுக்கு என்னுடைய நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு தமிழ்நாடு மாநில குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் திருமதி.புதுக்கோட்டை விஜயா, அவர்கள் பேசினார்கள்.

நடைபெற்ற கலந்தாலோசனை கூட்டத்தில் தமிழ்நாடு மாநில குழந்தை உரிமை பாதுகாப்பு ஆணையத்தின் உறுப்பினர்கள் திரு.செல்வேந்திரன், திருமதி. ஜெயசுதா, மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் திரு மதி.சகிலா பானு, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.இரா.பிரின்ஸ் ஆரோக்கியராஜ், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.மதியழகன், மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி. விஜயமீனா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிதிட்ட அலுவலர், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அரவிந்த் ஜோதி, இணை இயக்குநர் மருத்துவம் மரு.சகாயஸ்டிபன் ராஜ், துறை அலுவலர்கள், உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



## தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதிக்குட்பட்ட, பாக நிலை முகவர்கள் கூட்டம்

தாம்பரம், நவ.21-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதிக்குட்பட்ட, பாக நிலை முகவர்கள் (BLA-2) பாக மின்னனு முகவர்கள் (BDA) பாக இளைஞர் அணி ஆலோசனை கூட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா மற்றும் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதி இளம்சுருதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள் இந்த நிகழ்ச்சியில் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், BLA-2, BDA, BLC, பாக இளைஞர் அணியினர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## கோவை மெட்ரோ ரயில் திட்டத்தை உடனடியாக அனுமதிக்க கோரி ஆர்ப்பாட்டம்

கோவை, நவ.21-

கோவை மாவட்டம் கலெக்டர் அலுவலகம் அருகே கோவை மதுரை மெட்ரோ ரயில் திட்ட அறிக்கையை திருப்பி அனுப்பிய மத்திய அரசையும், பிரதமர் நரேந்திர மோடியையும் கண்டித்தும் மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் தலைவர் வெ.ஈசுவரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கோவைக்கு மெட்ரோ ரயில் திட்டம் தேவையில்லை என்று கருத்து தெரிவித்து மெட்ரோ ரயில் திட்ட அறிக்கையை மத்திய அரசு திருப்பி அனுப்பியது கோவை மக்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்தியா முழுவதும் மெட்ரோ ரயில் திட்டங்களை செயல்படுத்த தகுதியான நகரங்கள் என 19 நகரங்களின் பட்டியலை 2011 ஆம் ஆண்டு மத்திய அரசு வெளியிட்டது.

இதில் கோவை 16வது இடத்தில் உள்ளது கோவைக்கு அடுத்த இடத்தில் உள்ள கொச்சியிலும் பாட்னாவிலும் மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மத்திய அரசின் இந்த பட்டியலில் இல்லாத ஆக்ரா மற்றும் போபால் நகரங்களுக்கும் மெட்ரோ ரயில் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது ஏன்.

தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து மெட்ரோ ரயில் திட்டம் தொடங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்தியாவின் வளர்ந்து வருகின்ற நகரங்களில் மிக முக்கியமான நகரம் கோவை ஆகும் கம்ப்யூட்டர் துறையிலும் மென்பொருள் துறையிலும் இயந்திர பொறியியல் துறையிலும் பெரும் வளர்ச்சி பெற்று வருகின்ற கோவை மாநகரத்திற்கு மெட்ரோ ரயில் திட்டம் மிகவும் முக்கியமானதாகும்.

தமிழ்நாடு அரசு கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பே திட்ட அறிக்கை கொடுத்திருந்தும் நீண்ட நாட்கள் கழித்து மீண்டும் திருப்பி அனுப்புவது ஏற்புடையது அல்ல மக்கள் தொகை பிரச்சினை என்ற காரணம் இருந்தால் உடனடியாக மத்திய அரசு திருப்பி அனுப்பி இருக்க வேண்டும் ஆனால் இத்தனை நாட்கள் இதற்கு எடுத்துக் கொண்ட காரணம் என்ன மேலும் இந்த கருத்தை சென்னை மெட்ரோ ரயில் திட்ட அதிகாரிகள் கூறுகிறார்களே ஒழிய மத்திய அரசு இது குறித்து எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை.

கோவை வந்த நரேந்திர மோடி கோவை மதுரை மெட்ரோ ரயில் திட்டத்திற்கான உறுதியை தர வேண்டும் என கேட்டுக்கொண்டனர்.

நிகழ்வு மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் நிர்வாகிகள் உறுப்பினர்கள் உட்பட ஏராளமானவர் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## தமிழ்நாடு அரசின் சார்பில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் பல்வேறு திட்டங்கள் விவசாயிகளின் வருமானத்தை பெருக்க செயல்படுத்தப்பட்டு வருகின்றன

இராமநாதபுரம், நவ.21-

தமிழ்நாடு அரசின் சார்பில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் பல்வேறு திட்டங்கள் விவசாயிகளின் வருமானத்தை பெருக்க செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் மிளகாய், கொத்தமல்லி, தென்னை மற்றும் பனை போன்ற தோட்டக்கலைப் பயிர்கள் அதிகம் சாகுபடி செய்யப்படுகிறது. தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தில் பரப்பு விரிவாக்கம் இனத்தின்கீழ் குழித்தட்டு மூலம் உற்பத்தி செய்யப்படும் வீரிய இரக மிளகாய் நாற்றுகள், தக்காளி, கத்தரிக்காய் போன்ற வீரிய காய்கறிநாற்றுகள் மற்றும்மா, கொய்யா போன்ற பழச்செடிகள் தோட்டக்கலைத்துறையின் மூலம் விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப் படுகிறது.

மேலும்; பண்ணைக்குட்டை அமைத்தல்,



தேனீ வளர்ப்பு பெட்டி, நிழல் வலைகுடில், பறவைதடுப்புவலை, நிரந்தர மண்புழுஉரம் தயாரிப்பு கூடம், குறைந்த விலையில் வெங்காய சேமிப்புகிடங்கு, நடமாடும் காய்கறி விற்பனைவண்டி போன்றவைகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. தேசிய நுண்ணீர் பாசன திட்டத்தில் சொட்டுநீர், தெளிப்புநீர் பாசன அமைப்புகள் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 100மூ மானியம், இதர விவசாயிகளுக்கு 75மூ மானியமும் வழங்கப்படுகிறது.

மாநில தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ்மாடித்தோட்டதொகுப்பு, பாரம்பரிய காய்கறித்திட்டங்கள்;, தென்னை பரப்பு விரிவாக்கம் ஆகியவை செயல்படுத்தப்படுகிறது. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பந்தல் அமைத்தல் மற்றும் முருங்கை பரப்பு விரிவாக்கம் போன்ற இனங்களில் விவசாயிகளுக்கு 50மூ மானியம் வழங்கப்படுகிறது. ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத் திட்டத்தில் ஆறு வகையான காய்கறி விதைகள் தொகுப்பு மற்றும் பழச்செடிகள் தொகுப்பு 100மூ மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்;ச்சித் திட்டம் மூலம் வீரிய காய்கறி விதைகள், தென்னங்கன்றுகள் மற்றும் பழச்செடிதொகுப்புகள் விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்படுகிறது. புனை மேம்பாட்டு இயக்கம் திட்டத்தில் பனை விதைகள், கன்றுகள் வழங்குதல், பனை மதிப்புகூட்டுப்பொருட்கள் தயாரிக்கும் கூடம் அமைத்தல் போன்றவைகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

தோட்டக்கலைத் துறையின் மூலம் கடந்த 5 ஆண்டுகளில் 1,43,269 பயனாளிகளுக்கு பல்வேறு திட்டங்களின் மூலம் ரூ.12.85 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

திருப்புல்லாணி வட்டாரம் மாயக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு.ச.பெரியசாமி அவர்கள் தெரிவிக்கையில்,

நான் எனது கிராமத்தில் விவசாயம் செய்து வருகின்றேன். தோட்டக்கலைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் தொடர்பாக எனது கிராமத்தில் உள்ளவர்கள் சொல்லக்கேட்டு தோட்டக்கலைத்துறை அலுவலர்களை அணுகி பனை மேம்பாட்டு இயக்க திட்டம் தொடர்பாக கேட்டறிந்தேன். அதனைத்தொடர்ந்து எனது கிராமத்தில் பனை மேம்பாட்டு இயக்க திட்டத்தில் மதிப்பு கூட்டுப் பொருட்கள் தயாரிப்புக் கூடம் அமைத்து ரூ.50000 மானியம் பெற்று அதன் மூலம் மதிப்புக்கூட்டுதலை எளிமையாக்கி தரம் நிறைந்த கருப்பட்டி தயாரித்து விற்பனை செய்து வருகின்றேன். இதன் மூலம் கூடுதல் இலாபம் பெற்று வருகின்றேன். இத்திட்டத்தின் மூலம் என்னைப்போன்ற நடுத்தர விவசாயிகளின் வாழ்வில் முன்னேற்றம் காணும் வகையில் திட்டங்களை அறிவித்து அதனை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.




# வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழக நில அளவை அலுவலர்கள் ஒன்றியத்தின் சார்பில் அரசு நிறைவேற்றாத 14 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற ஆர்ப்பாட்டம்

வேலூர், நவ.21-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி பகுதியில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழக நில அளவை அலுவலர்கள் ஒன்றியத்தின் சார்பில், அரசு இதுவரை நிறைவேற்றாத 14 அம்ச நிலுவை கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக காலவரையற்ற வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, வேலூர் மாவட்ட ஒன்றியத்தின் மாவட்ட தலைவர் ராஜ்குமார் தலைமையில், மாவட்ட செயலாளர் சுதர்சன் தலைமுறையிலும், பொருளாளர் மதன் குமார் வழங்கிய வரவேற் புரையுடன் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வேலூர் மாவட்ட உயர்மட்ட குழுவின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜோஷி, அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் தினதயாளன், முன்னாள் மாநில செயலாளர் சேகர் உள்ளிட்ட பல நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்களுடைய ஆதரவும் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

மேலும், 14 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி காலவரையற்ற வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இயக்குநரகம் வெளியிட்ட சுற்றறிக்கையின் படி பட்டா மாறுதல் பணிகள் கணினி மூலம் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற உத்தரவை மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் உள்ளடக்கிய 14 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்பாட்டம் நடைபெற்றது.





# மூத்த சட்டமன்ற உறுப்பினர் காட்பாடி தொகுதியில் பெருமிகு. மக்கள் போற்றும் சுற்றுலா தளம் கழிஞ்சூர் தாராபடவேடு ஏரி சுற்றுலா தலத்தை பொதுமக்கள் அசுத்தம் செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்

## 60 ஆண்டுகால மூத்த சட்டமன்ற உறுப்பினரும், அமைச்சருமான துரைமுருகன் மக்களிடம் வேண்டுகோள்

காட்பாடி, நவ.21-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, கழிஞ்சூர், தாராபடவேடு ஏரிகளை இணைத்து 6.2 கிலோ மீட்டர் நடைபாதை, படகு குழாம், செயற்கை மண் திட்டுக்கள் அமைத்து ரூ.36.59 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா தலமாக்கி அதனை பொதுமக்களுக்கு அர்ப்பணிக்கும் விழா, ரூ.20.90 கோடி மதிப்பீட்டில் காட்பாடி நகரில் 3 வெள்ள தடுப்பு பணிகள், கழிஞ்சூர் ஏரியின் உபரி நீர் கால்வாயின் தரைப்பாலம் பணிக்கு ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டு விழா நடந்தது.

இவ்விழாவிற்கு வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். விழாவில் வேலூர் எம்.பி. கதிர்ஆனந்த் முன்னிலை வகித்து பேசினார். நீர்வளத்துறை தலைமை பொறியாளர் பொதுப்பணி திலகம் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக 60 ஆண்டுகால மூத்த சட்டமன்ற உறுப்பினரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து, 0கலந்து கொண்டு சுற்றுலா தலத்தை பொதுமக்களுக்கு அர்பணித்தும், நலத்திட் டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது;

அ.தி.மு.க ஆட்சியில் கழிஞ்சூரில் மருத்துவமனையை அமைக்க வேண்டும் என நினைத்தேன். அதனை அடுக்கம்பாறைக்கு கொண்டு சென்று விட்டனர். அதனால் கழிஞ்சூருக்கு ஏதாவது நலத்திட்டம் செய்ய வேண்டும் என்று நினைத்தேன். அது இப்போது கழிஞ்சூர், தாராபடவேடு ஏரிகளை இணைத்து சுற்றுலா தலமாக்கப்பட்டுள்ளது. இதனை அதிகாரிகள் அற்புதமாக வடிவமைத்துள்ளனர். சுற்றுலா தலத்தை கொண்டு வருவது என்னுடைய வேலை. அதனை அசுத்தம் செய்யாமல் காப்பாற்ற வேண்டியது பொதுமக்களின் பொறுப்பு. ஏரியில் படகு விட வேண்டும் என கூறியுள்ளார்கள்

அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். காட்பாடி தொகுதியில் மாலை நேரத்தில் பொழுது போக்கும் இடமாக இந்த சுற்றுலா தலம் அமையும். மோர்தானா அணையை சுற்றுலாத்தலமாக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குடியாத்தம் ஆற்றில் ரூ.40 கோடி செலவு செய்து பாலம் கட்டப்பட்டுள்ளது. அங்கிருந்த ஆக்கிரமிப்பு வீடுகள் அப்போது இடிக்கப்பட்டது. இதனால் அப்போது திட்டினார்கள். இப்போது பாராட்டு கிறார்கள். வேலூர் சதுப்பேரி சுற்றுலா தலமா க்கும் பணி நடைபெற்று வருகிறது. அணைக்கட்டில் விரைவில் அணை கட்டப்படும். பேர்ணாம்பட்டு பத்திரப்பல்லி அணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வேலூர் மாவட்டம் நீண்ட நெடுங்காலமாக புறக்கணிக்கப்பட்டு வந்தது.

கடந்த 1971 ஆம் ஆண்டு நான் காட்பாடி தொகுதியில் சட்டமன்ற தேர்தலில் நின்ற போது பாலாற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தேன். அதற்காக குடிநீர் வடிகால் வாரியம் அமைபட்டு அது தற்போதும் காட்பாடி தொகுதியில் செயல்பட்டு வருகிறது. காட்பாடி தொகுதியில் தாலுகா அலுவலகம், 40 உயர்நிலை பள்ளிகள், துணை போலீஸ் சூப்பிரண்டு அலுவலகம், கோர்ட், சட்டக்கல்லூரி என எது தேவையோ அதனை கொண்டு வந்துள்ளேன். காட்பாடி தொகுதியில் நான் முதன்முதலாக போட்டியிட்ட போது பொன்னையில் ஆற்றுப்பாலம் கேட்டார்கள். அதனை 2 ஆண்டில் கட்டி முடித்து கலைஞரை கொண்டு வந்து திறந்து வைத்தேன். பல ஆண்டுகளுக்கு பின்னர் அந்த பாலம் இடிந்து விட்டது. அதனை அ.தி.மு.க ஆட்சியில் கட்டவில்லை. நான் இப்பொழுது ரூ.48 கோடியில் புது பாலம் கட்டிக் கொடுத்துள்ளேன். பாலாற்றில் கவசம்பட்டு, டி.கே.புரம், குகையநல்லூர், பரமசாத்து ஆகிய இடங்களில் தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளது. இதனால் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. காட்பாடி டெல் தொழிற்சாலை எதிரிலும், மகிமண்டலத்திலும் சிப்காட் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. சேர்க்காட்டில் அரசு மருத்துவமனை, அரசு கலைக்கல்லூரி கொண்டு வந்துள்ளேன். சொல்லிய எதையும் விட்டுவிடவில்லை. காட்பாடி தொகுதி மேம்பாட்டில் யாரும் குறை சொல்லாத அளவு திட்டங்களை நிறைவேற்றி உள்ளேன். பெற்ற பெண்ணுக்கு திருமணம் என்றால் எப்படி மகிழ்ச்சி அடைவேனோ அதுபோல இன்று கழிஞ்சூர், தாராபடவேடு ஏரி சுற்றுலா தலத்தை திறந்து வைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் அமலு விஜயன் எம்.எல்.ஏ., 0வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா, துணை மேயர் எம்.சுனில்குமார், முன்னாள் பேரூராட்சி தலைவர் நரசிம்மன், மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா ஆகியோர் பேசினர். விழாவில் கமிஷனர் லட்சுமணன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் தணிகாசலம், மாநகராட்சி கவுன்சிலர்கள் அன்பு, விமலா சீனிவாசன், டீடா சரவணன், கே.ஜி.சீனிவாசன், பிரம்மபுரம் ஊராட்சி தலைவர் ராதாகிருஷ்ணன் மற்றும் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கே சி சுரேஷ்., கோ .முரளி பாஸ்கர், மாணவரணி ஆர், சதீஷ், மாமன்ற உறுப்பினர் டீட்டா சரவணன், அரசு துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உடாபட பலர் கலந்து கொண்டனர்.




# வேலூரில், சிறப்பு தீவிர திருத்த வாக்காளர் கணக்கிட்டு படிவம் சேகரிப்பு குறித்து ஆலோசனை கூட்டம்

வேலூர், நவ.21-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், மாவட்ட தேர்தல் அலுவலரும் / மாவட்ட ஆட்சியருமான சுப்புலெட்சுமி தலைமையில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த கணக்கீட்டு படிவங்களை சேகரிக்கும் பணிகளை மேற்பார்வையிட நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட அளவிலான அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.




# தேவதாஸ் மருத்துவமனையில் மருத்துவ துறையின் முன்னேற்றங்கள் குறித்து விழிப்புணர்வு கண்காட்சி

மதுரை, நவ.21-

மருத்துவ உலகத்தில் வேகமாக வளர்ந்து வரும் நவீன சிகிச்சை முறைகள் குறித்து பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன், மருத்துவத் துறையின் முன்னேற்றங்கள் என்ற தலைப்பில், மதுரை தேவதாஸ் மருத்துவமனையில் மருத்துவ கண்காட்சி நடைபெற்றது, இந்த கண்காட்சியை தேவதாஸ் மருத்துவமனையின் துணைத் தலைவர் டாக்டர் சதீஷ் தேவதாஸ் மற்றும் நிர்வாக இயக்குனர் டாக்டர் ஹேமா சதீஷ் மற்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அரவிந்த் ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தனர், இந்த கண்காட்சியில் மருத்துவ நிபுணர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே மருத்துவத் தொழில்நுட்பம் பற்றிய அறிவுப்பூர்வமான சிந்தனைகள் பற்றிய பரிமாற்றம் மற்றும் விழிப்புணர்வை உருவாக்குவதற்கான ஒரு தளமாக இந்த எக்ஸ்போ வடிவமைக்கப்பட்டுள்ளது, இந்த கண்காட்சியில் முன்னோடியான பரிசோதனை கருவிகள், மேம்பட்ட அறுவை சிகிச்சை முறைகள், நவீன நோயாளி பராமரிப்புக்கான புதிய தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன, மேலும் நேரடி டெமோ , நிபுணர்கள் உரைகள் மற்றும் தகவல் டிஸ்ப்ளேக்களும் இடம் பெற்றுள்ளன, இந்த கண்காட்சி குறித்து டாக்டர் சதீஷ் தேவதாஸ் கூறியுள்ளது யாதெனில், மருத்துவ அறிவியல் எவ்வளவு வேகமாக முன்னேறுகிறது என்பதையும், பொதுமக்கள் மருத்துவ அமைப்பின் மீது நம்பிக்கையுடன் இருக்க வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதையும் இந்த கண்காட்சி மூலம் உறுதுணையான முறையில் வெளிப்படுத்தியுள்ளோம், மருத்துவ அறிவை அனைவருக்கும் எளிதாகவும் சுவாரஸ் யமாகவும் மாற்றுவதே எங்கள் நோக்கம் இவ்வாறு கூறினார், டாக்டர் ஹேமா சதீஷ் கூறியது யாதெனில், நோயாளி பராமரிப்பை மாற்றும் முன்னேற்றங்களை மக்களுடன் இணைக்கும் ஒரு முயற்சி தான் இந்த மெடிக்கல் எக்ஸ்போ , மாணவர்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பங்கேற்று நவீன மருத்துவ முன்னேற்றங்கள் எப்படி மனித வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்துகின்றன மற்றும் உயிர்களை காப்பாற்றுகின்றன என்பதை நேரடியாக அறிய, இந்த கண்காட்சி உதவுகின்றன இவ்வாறு கூறினார்,






■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் கடந்த (நவ19) மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நகர் ஊரமைப்பு இயக்கம் சார்பில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் காங்கேயம் மற்றும் வெள்ளகோவில் கூட்டு உள்ளூர் திட்ட பகுதிக்கான ஜி.ஐ.எஸ்.அடிப்படையிலான முழுமைத்திட்டம் தொடர்பான கலந்தாய்வுக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அ.அட்னான் அமீர் சாகிப் உள்ளார்.





■ மதுரை மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில் வரும் 28112025 முதல் 10122025 வரை 14வது ஹாக்கி ஆடவர் ஜூனியர் உலகப்கோப்பை நடைபெறுவதை முன்னிட்டு வீரர்கள் வருகை, வரவேற்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை குறித்து தொடர்புடைய அலுவலர்களுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது




■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் தாம்பரம் மேற்கு பகுதிக்குட்பட்ட, பாக நிலை முகவர்கள் (BLA-2) பாக மின்னனு முகவர்கள் (BDA) பாக இளைஞர் அணி ஆலோசனை கூட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா மற்றும் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதி.இளம்சுருதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.இந்திரன் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், BLA-2, BDA, BLC, பாக இளைஞர் அணியினர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# கிழக்கு தாம்பரத்தில் தாம்பரம் மாநகர தெற்கு பகுதி தேமுதிக சார்பில் ஆலோசனை கூட்டம்





தாம்பரம், நவ.21-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர தெற்கு பகுதி தேமுதிக சார்பில் பகுதி செயலாளர் கேட்.எம்.தர்மா தலைமையில், ஏழுமலை, தமிழரசி, நெரும்பூர் ராஜேந்திரன் ஆகியோரின் முன்னிலையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் அனகை முருகேசன், மாவட்ட துணை செயலாளரும் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான மா.செழியன் ஆகியோர் கலந்து கொண்டு டிசம்பர் 28ஆம் தேதி விஜயகாந்த் நினைவு நாளை முன்னிட்டு இரண்டாம் ஆண்டு குருபூஜை, கடலூரில் ஜனவரி 9ஆம் தேதி நடைபெறும் மாநாடு குறித்தும் மற்றும் பாக நிலை முகவர்கள் கூட்டம் நிர்வாகிகளுக்கு சிறப்பு ஆலோசனைகளை வழங்கினர். இதில் மாவட்ட மகளிர் அணி செயலாளர் பாத்திமா ஸ்டெல்லா, மாவட்ட வழக்கறிஞர் துணைச் செயலாளர் சுஜாதா நந்தினி, தெற்கு பகுதி துணைச் செயலாளர் ஐ.கே தர்மா மாவட்ட பிரதிநிதி பாலமுருகன் இளைஞரணி துணைச் செயலாளர் சந்தோஷ் குமார் மகளிர் அணி நிர்வாகிகள் டாக்டர் சுமதி ரம்யா வட்டச் செயலாளர்கள் 62வது வட்ட செயலாளர் இளங்கோ 63வது கிழக்கு வட்ட செயலாளர் குமார் மேற்கு வட்டச் செயலாளர் தேன் என்கின்ற லட்சுமி காந்த் 64வது வட்டச் செயலாளர் கன்னியப்பன் 47வது வட்ட செயலாளர் சந்தோஷ் குமார் 46வது வட்டச் செயலாளர் காந்தி ராஜ்குமார் பிரசுரவி காஜா மொய்தின் சங்கர் நாகூர் மீரான் துணைச் செயலாளர் சரசு பூபதி விக்கி பரமசிவம் பாக்யராஜ் சின்னதம்பி கிச்சா என்கின்ற கிருஷ்ணமூர்த்தி ஜான் சரவணன் ஜான் பிரீத்தி சுதா எழிலரசி சுபா சோபனா சுகந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161